2010 நவம்பர் 9]

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவை, ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புதிதாக அமைக்கப்பட்ட சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆட்சிக் குழுவில் (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணிபுரிய தலா ஒரு சட்டப் பேரவை உறுப்பினரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவையில் (Senate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணிபுரிய மூன்று சட்டப் பேரவை உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள்/பதிவாளர்கள் ஆகியோரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

சென்னை மற்றும் மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 6–12–2010 முதல் மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

முற்பகல் 11–40

வேட்பு மனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 10–11–2010 அன்று நண்பகல் 12–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுக்கள் அன்று பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 11–11–2010 அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம். வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–11–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 2–3–2010 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2. (i) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைத்தது குறித்தும்; (ii) தமிழ்நாடு அரசிதழின் பாகம் II–ல் வெளியிடப்பட்ட 21–5–2008 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வ.வ.ப./19/2008 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும்; (iii) தமிழ்நாடு அரசிதழின் பாகம் II–ல் வெளியிடப்பட்ட 10-6-2009 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வ.வ.ப./14/2009 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், சோம்புப் பொடி, மிளகுப் பொடி மற்றும் சீரகப் பொடி தயாரிப்பில் பயன்படுத்துவதற்கான மூலப்பொருட்களின் கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (v) யாதொரு வணிகர், ஒரு ஆண்டின் மொத்த விற்பனைத் தொகை ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக விற்பனை செய்யும் சோற்றுக் கற்றாழையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vi) வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரையின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க விற்பனை வரியை விலக்களித்தது குறித்தும்; மற்றும் (viii) யாதொரு